பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 12 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியல் சாசன சிற்பி டாக்டர் அம்பேத்கரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. சமத்துவ சமூகம் காண அரும்பாடுபட்ட பாபாசாஹேப் அம்பேத்கரின் கனவுகளை நனவாக்க உறுதியேற்போம் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. வடகிழக்கு மாநிலங்கள், தென்கிழக்கு ஆசியாவின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனாவால் தெரிவித்துள்ளார்.
3. வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
4. மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

**[]<<<>>>[]**

அரசியல் சாசன சிற்பி பாரத ரத்னா பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் 69-வது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் உள்ள அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு ரகுபர்தாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, முன்னாள் குடியரசுத்தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே மற்றும் மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்தியில், சமத்துவம் சமூகம் காண அரும்பாடுபட்ட பாபாசாஹேப் அம்பேத்கரின் கனவுகளை நனவாக்க உறுதியேற்போம் என்று தெரிவித்துள்ளார்.

அவரது தொலைநோக்கு பார்வையை செயல்படுத்துவதில் நாம் அனைவரும் உறுதிகொள்வோம் என்றும் பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளர்.

[]<<<>>>[]

நாட்டின் விடுதலைக்கும், மனிதர்களின் சம உரிமைக்கும் அம்பேத்கர் ஆற்றிய தியாகங்களை நினைவு கூர்வோம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.,

அம்பேத்கர் நினைவு தினத்தையொட்டி அவரது உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அவர் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் தமது பேரறிவால் சமத்துவத்துக்கும், நீதிக்கும் பாதை அமைத்தவர் டாக்டர் அம்பேத்கர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

[]<<<>>>[]

மாநிலங்களவையில் ரூபாய் நோட்டு கட்டு கைப்பற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று தூய்மைப் பணி மேற்கொண்டபோது காங்கிரஸ் உறுப்பினர் திரு அபிஷேக் மனு சிங்வி அமர்ந்திருந்த இடத்தில் ரூபாய் நோட்டு கட்டு ஒன்றை பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று கைப்பற்றினர்.

மாநிலங்களவை இன்று கூடியபோது இந்த விவகாரம் தமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதாகவும், அது தொடர்பான விசாரணை நடைபெற்று வருவதாகவும் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுவதை யாரும் ஆட்சேபிக்கக்கூடாது என நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே, விசாரணைக்கு தமது கட்சி ஆட்சேபம் தெரிவிக்காது என்றும், முழுமையான விசாரணைக்குப் பிறகே முடிவு தெரியவரும் என்றும் கூறினார்.

**[]<<<>>>[]**

செமிகண்டக்டர் துறையில் இந்தியா - ஜப்பான் இடையேயான ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்தியா - ஜப்பான் கூட்டமைப்பு கூட்டத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

உலக அளவில் செமிகண்டக்டர் உற்பத்தியில் முன்னேற்றம் காணும் வகையில் இரு நாடுகளும் தைவான் நாட்டுடன் இணைந்து செயல்பட்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த பத்து ஆண்டுகளில் இத்துறை பெருவளர்ச்சி காணும் எனவும், புவிசார் அரசியல் நிலைப்பாடுகளில் செமிகண்டக்டர் துறை முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவும் - ஜப்பானும் அண்டை நாடானா சீனாவுடன் நல்லுறவை மேலும் வலுப்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நட்பு நாடுகளுடன் கல்வி தொடர்பான பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

வடகிழக்கு மாநிலங்கள், தென்கிழக்கு ஆசியாவின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனாவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களுக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருவதினால், அப்பகுதி வளர்ச்சி கண்டு வருவதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திரமோடி வடகிழக்கு மாநிலங்களுக்கு 60 முறை பயணம் மேற்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் செயல்பாட்டினால் அப்பகுதியில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவி வருவதாக திரு சர்பானந்த சோனாவால் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ரிசர்வ் வங்கி வங்கிளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என ரசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

மும்பையில் அதன் ஆளுநர் திரு சக்தி காந்ததாஸ் தலைமையில் நடைபெற்ற இருமாத நிதிக்கொள்கைக் குழுக் கூட்டத்திற்குப்பின் வெளியிட்ட அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

ரெப்போ வட்டி விகிதம் ஏற்கனவே இருந்து வரும் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக தொடரும் என்றும், வைப்புத் தொகைக்கான நிலையான வட்டி விகிதம் ஆறு புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாக தொடரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் ரெப்போ வட்டி விகிதம் தொடர்ந்து அதே நிலையில் இருந்து வருவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை எழும்பூரில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அவர் இன்று வழங்கி பேசினார்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவு நீரை அகற்றுவதற்கு நவீன சாதனங்கள் பயன்படுத்தப்படுவதாக திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -35 -- செகண்ட்*

**[]<<<>>>[]**

புதுச்சேரி சர்வதேச ஆவண மற்றும் குறும்பட திருவிழா இன்று தொடங்குகியது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த விழாவில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 35 குறும்படங்கள் மற்றும் ஆவணப் படங்கள் திரையிடப்படவுள்ளன.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள இந்த விழாவை, இந்திய ஆவணப்பட தயாரிப்பாளர் திரு. ஆனந்த் பட்வர்தன் தொடங்கி வைத்தார்.

இன்று 10 திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்த விழாவிற்கு மின்னணு ஊடக மற்றும் மக்கள் தொடர்பு துறை ஏற்பாடு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமரின் பெயர் விரைவில் அறிவிக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு இமானுவேல் மெக்ரான் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் திரு மைக்கேல் பானியர் தோல்வியடைந்ததை அடுத்து, அவர் தமது பதவியை ராஜிநாமா செய்தார்.

**[]<<<>>>[]**

ஈரான் நாட்டின் குஜஸ்தான் மாகாணத்தில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது ஐந்து புள்ளி ஆறாக பதிவானது.

இந்த நிலநடுக்கம் காரணமாக 29 பேர் காயமடைந்துள்ளதாகவும், 296 வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை -5- விக்கெட் இழப்புக்கு -91- ரன் எடுத்துள்ளது.

அடிலெய்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

[]<<<>>>[]

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணிக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் இலங்கை சற்று முன் வரை -4- விக்கெட் இழப்புக்கு -111- ரன் எடுத்துள்ளது.

ஷார்ஜாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது,.

[]<<<>>>[]

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்னூக்கர் போட்டியில் இந்தியாவின் **ishpreeth chadha** மற்றும் கிரிஸ் குர்பாக்ஷனி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

[]<<<>>>[]

ஆசிய மகளிர் ஹேண்ட்பால் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

புதுதில்லியில் இப்போட்டி மாலை மணி 6-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

உலக பளு தூக்குதல் சாம்பியன் போட்டி, பஹ்ரைனின் மனாமா நகரில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் மகளிர் பிரிவில் ஞானேஸ்வரி யாதவ், பிந்தியாராணி தேவி, **Ditimoni Sonowal** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

தேசிய சீனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி, பெங்களூருவில் இன்று தொடங்கியது.

தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட 24 மாநிலங்களைச் சேர்ந்த 700-க்கு மேற்பட்ட வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

மேகாலயாவில் பருவநிலைக்கு ஏற்ற நீர் சேமிப்பு திட்டத்திற்கான 50 மில்லியன் டாலர் கடனுதவி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியுடன் மத்திய அரசு கையெழுத்திட்டுள்ளது.

பொருளாதார விவகாரங்கள் துணை இணைச் செயலர் ஜூகி முகர்ஜியும், ஆசிய வளர்ச்சி வங்கியின் இந்தியாவுக்கான இயக்குநர் திரு மியான் ஒகா-வும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

**[]<<<>>>[]**